<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.</u>

<u>அ.வ.எண். 114/2024</u>

<u>நாள். 26.03.2025</u>

2025ம் ஆண்டு மார்ச் 26 ஆம் தேதி என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திரு.M.கனகலிங்கம், உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

==============================================================

| | |
|---|---|
| பெயர் = இளமங்கை | தகப்பனார் பெயர்= |
| கிராமம் = | தாலுக்கா = |
| தொழில் = | வயது = |

==============================================================

**<u>PW1 மு.வி</u>**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டு நான் கையொப்பம் செய்துள்ளேன். கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன். அதனை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

12.08.2009 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் ஆவண எண்.2709/2009 (Damaged) அசல் வா.சா.ஆ.1, 12.08.2009 தேதியிட்ட மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2, மாரீஸ்வரன் என்பவரின் வாரிசு சான்றிதழ் மற்றும் பிரேதபரிசோதனை சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3, 28.12.2023 தேதியிட்ட பாகபாத்திய விடுதலை பத்திரம் அசல் வா.சா.ஆ.4, 02.01.2024 தேதியிட்ட எனது பெயரில் ஏற்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் ஆவண எண்.1/2024 அசல் வா.சா.ஆ.5 ஆகும்.

மேலும் சான்றாவணங்கள் குறியீடு செய்ய 23.04.2025 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.